TNTAM/25/A3638

# காவல் விரைவு செய்தி

நீதி வெல்லும்

தமிழ் மாத இதழ்

| | | | | |
|---|---|---|---|---|
| Volume: 1 | Issue: 5 | March 2026 | 8 Pages | Rs. 10/- |
| மலர் 1 | இதழ் 5 | மார்ச் 2026 | 8 பக்கம் | ரூ. 10/- |


## குற்றம், குற்றவாளிகள் கண்காணிப்பு வலைபின்னல் அமைப்பு (CCTNS) 2.0 மென்பொருள், டிஜிட்டல் கைரேகை சேகரிப்பு அமைப்பு (DFCS) திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்

சென்னை, மார்ச்.

குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு வலைபின்னல் அமைப்பு (CCTNS) 2.0 மென்பொருள் மற்றும் டிஜிட்டல் கைரேகை சேகரிப்பு அமைப்பு (DFCS) ஆகிய இரண்டு திட்டங்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.




மேலும் தமிழ்நாடு இணையவழி குற்றப்பிரிவால், வெளியிடபட்டுள்ள வேண்டுகோளில், இலவச திரைப்படங்கள், வெப்சீரிஸ், இலவச ஓ.டி.டி சேவைகள் வழங்குவதாகக் கூறி இயங்கும் அங்கீகாரமற்ற (PI-RATED) திரைப்பட மற்றும் ஸ்ட்ரீமிங் செயலிகளைப் பயன்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்ளபடுகிறார்கள். அங்கீகாரமற்ற செயலிகளை மூன்றாம் தரப்பு இணையதளங்களில் (Third-Party Websites), மூலம் பகிரப்படுகின்றன. இவற்றை நிறுவும்போது மொபைல் சாதனங்களில் அடிப்டையாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்கள் செயலிழக்க செய்யப்படுகின்ற காரணத்தால், இதனை பயன்படுத்துபவர்கள் கடுமையான சைபர் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளுக்கு ஆளாகின்றனர். இத்தகைய சட்டபூர்வமான அங்கிகாரம் இல்லாத செயலிகளை பயன்படுத்துவதன் மூலம், பயனாளர்களின் தொலைபேசியில் சேமிக்கப்பட்டுள்ள தொடர்புகள், புகைப்படங்கள், செய்திகள் போன்ற தனிப்பட்ட தகவல்கள் திருடப்பட வாய்ப்பு உள்ளது. இவ்வாறு திருடப்பட்ட தகவல்களை பயன்படுத்தி சைபர் குற்றவாளிகள் டிஜிட்டல் கைது, போலி முதலீட்டு, போலி வேலைவாய்ப்பு போன்ற மோசடி குற்றச்செயல்களை மேற்கொள்ளவும் வாய்ப்புள்ளது. மேலும், வங்கி மற்றும் நிதி தொடர்பான விவரங்கள் திருடப்பட்டால், பண இழப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது. சட்டபூர்வமான அங்கிகாரம் இல்லாத செயலிகளை பதிவிறக்கம் செய்தல், பகிர்தல் அல்லது பயன்படுத்துதல் சட்ட விரோதமான செயலாகும், இதனால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க அதிக வாய்ப்பு உள்ளது. இத்தகைய சட்ட விரோதமான தளங்கள் எந்த விதமான ஒழுங்குமுறையும் இன்றி செயல்படுகின்றன. மேலும் இவை மொபைல் சாதனங்களின் 'Settings' அமைப்புகளை தவறாக பயன்படுத்தி தேவையற்ற அனுமதிகளை (Permissions) பெற்று, அந்த சாதனங்களில் சேமிக்கப்பட்டுள்ள முக்கிய தரவுகளை சம்மந்தப்பட்ட நபர் அறியாமலேயே திருடுகின்றன. ஆகவே, பாதுகாப்பான அங்கீகரிக்கப்பட்ட செயலிகள் மற்றும் தளங்களை மட்டும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- மூன்றாம் தரப்பு இணையதளங்கள், டெலிகிராம், சமூக ஊடகங்களில் இருந்து திரைப்படஸ்ட்ரீமிங் ஆப்களைப் பதிவிறக்கசெய்ய வேண்டாம்.
- Install Unknown Apps என்ற பெர்மிஷன்-ஐ உங்கள் செல்போனின் 'செட்டிங்ஸ்'களில் அனுமதிக்காதீர்கள். உங்கள் மொபைலில் ஏற்கனவே அமைந்துள்ள பாதுகாப்பு அம்சங்களை மாற்ற வேண்டாம்.
- 'இலவச திரைப்படங்கள்'. 'இலவச OTT' 'சந்தா இன்றி பிரீமியம் என்று உறுதியளிக்கும் செயலிகளை(Apps) தவிர்க்க வேண்டும்.
- சந்தேகத்திற்கிடமான, நம்பகமற்ற பாப்அப் விளம்பரங்களை கிளிக் செய்யாதீர்கள்.
- கூகுள் பிளே ஸ்டோர், ஆப்பிள் ஆப் ஸ்டோரில் உள்ள அதிகாரப்பூர்வ OTT தளங்களை மட்டும் பயன்படுத்தவும்.
- தெரியாத லிங்க்களைக் கிளிக் செய்து அங்கீகாரமற்ற செயலிகளை பதிவிறக்கம் செய்தல், பகிர்வு செய்தல், மற்றும் பயன்படுத்துதல் குற்றசெயலாகும்.

**புகார் அளிக்க:**

நீங்கள் ஏதேனும் இணையவழி குற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்று சந்தேகித்தால் அல்லது ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டைக் கண்டறிந்தால், உடனடியாக இணையவழி குற்ற உதவி எண் 1930 ஐ தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் அல்லது www.cybercrime.gov.inஇல் புகார் அளிக்கலாம்.

ஆசிரியர்

## சென்னை மாவட்ட செய்திகள்...

சென்னை, மார்ச்.




எழும்பூரில் நள்ளிரவில் ஆட்டோ ஓட்டுநரிடம் சவாரி கேட்பது போல நடித்து அவரது செல்போனை திருடிச் சென்ற இருவரை, ரேபிடோ ஆட்டோ ஓட்டுநரின் துணிச்சலான உதவியுடன் விரட்டி பிடித்த திருவல்லிக்கேணி போக்குவரத்து புலனாய்வு பிரிவு தலைமைக் காவலர் செந்தில்குமார் மற்றும் வேப்பேரி போக்குவரத்து காவலர் சத்யராஜ் ஆகியோரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் வெகுமதி வழங்கி பாராட்டினார்.

மேலும், ஏழுகிணறு காவல் நிலையம் தொடர் திருட்டில் ஈடுபட்ட நபர் கைது. 2 இருசக்கர வாகனங்கள் மீட்பு..

திருமங்கலம் காவல் நிலையம் போதைப்பொருள்கள் வைத்திருந்த 2 நபர்கள் கைது. 4 கிராம் மெத்தம்பெட்டமைன், 14 கிராம் OG கஞ்சா, 21 ஸ்டாம்புகள், 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல்.

துரைப்பாக்கம் காவல் நிலையம் மெட்ரோ ரயில் பணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறையினர் அகற்றி வைத்திருந்த ஸ்டீல் பைப்புகளை திருடிய நபர் கைது. 150 கிலோ ஸ்டீல் பைப்புகள் மீட்பு.

பூக்கடை காவல் நிலையம்: மது அருந்த பணம் கேட்டு முதியவரையும் அவரது பேரன்களையும் தாக்கிய சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.

வேப்பேரி காவல் நிலையம்: பெண்ணிடம் தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை அபகரித்த வழக்கில் தாய் மற்றும் மகன் கைது. 2 செல்போன்கள் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல்.

அசோக் நகர் காவல் நிலையம்: தனியார் நிறுவனத்தின் தொழில் வரியை செலுத்துவதற்காக கொடுத்த பணம் ரூ.5.51 லட்சத்தை பெற்று மோசடி செய்த நபர் கைது.

சிறப்பாக பணியாற்றிய அனைத்து காவல் நிலையங்களுக்கும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் பாராட்டினார்.

... நிருபர்கள் - கதிரவன், காதர்மொகிதீன், சக்திவேல்.

## கரூர் மாவட்ட செய்திகள்...



கரூர். மார்ச்.

கரூர் மாவட்டத்தில் காணாமல்போன ரூ.25,00,000/- (இருபத்தைந்து லட்சம்) மதிப்புள்ள 136 செல்போன்களை CEIR APP மூலம் கண்டறிந்தும், மேலும் சைபர் குற்றங்களால் பணத்தை இழந்த 15 நபர்களின் இழந்த பணம் ரூபாய் 97,33,543/- மீட்கப்பட்டு (03.02.2026) கரூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட நபர்களை நேரில் வரவழைத்து செல்போன் மற்றும் பணத்தை உரிய நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் செல்போன்களை தவற விட்டாலோ அல்லது காணாமல் போனாலோ உடனடியாக சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு நேரில் அல்லது இணையத்தில் (https://eservices.tnpolice.gov.in/) -புகார் அளிக்கலாம் எனவும், சைபர் குற்றங்களால் பாதிக்கப்பட்டால் உடனடியாக 1930 என்ற இலவச தொலைபேசி எண்ணின் வாயிலாகவும் மற்றும் www.cybercrime.gov.in என்ற இணையதளத்தின் மூலமாகவும் புகார் பதிவு செய்யலாம் எனவும், மேலும் சைபர் குற்றங்கங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சைபர் கிரைம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. பிரபாகரன் அவர்கள் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி பரிமளாதேவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

... நிருபர் - சந்திரகுமார்,

## தஞ்சாவூர் மாவட்ட செய்திகள்...

தஞ்சாவூர், மார்ச்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் உட்கோட்டம், கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 02.05.2024 ம் தேதி தென்காசியைச் சேர்ந்த கணேசன் என்பவர் Phone pay&Gpay நிறுவனத்தின் Free ranger வேலை காரணமாக கும்பகோணம் வந்த நிலையில் ARK லாட்ஜ் அருகே அடையாளம் தெரியாத நபர்கள் பணம் கொடுக்கும்படி மிரட்டி கட்டையால் தலையில் தாக்கியதில் காயம் அடைந்து கும்பகோணம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவரிடம் வாக்கு மூலம் பெற்று கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி வழக்கினை புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஜெகதீசன் வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றவாளிகளான கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலைச் சேர்ந்த விஜய்(வயது-23), தஞ் சாவூர் மாவட்டம், கும்பகோணத்தைச் சேர்ந்த செந்தில்குமார் (வயது-24) மற்றும் ராஜாசேகர் (வயது-24) ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகளின் மீது 29.05.2024-ம் தேதி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்த கும்பகோணம் கூடுதல் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி. ராதிகா 12.02.2026-ம் தேதி மேற்படி வழக்கின் எதிரிகளான கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலைச் சேர்ந்த விஜய்(வயது-23), தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தைச் சேர்ந்த செந்தில்குமார்(வயது-24) மற்றும் ராஜாசேகர் (வயது-24) ஆகியோர்களுக்கு 7 வருட சிறை தண்டனை மற்றும் 1000/- அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் திறம்பட பணிபுரிந்தமைக்காக தற்போதைய புலன்விசாரணை அதிகாரியான கும்பகோணம் கிழக்கு காவல் ஆய்வாளர் இளையராஜா (பொறுப்பு) மற்றும் நீதிமன்றக் காவலர் திருமதி.ராதிகா மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் விஜயகுமார் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜாராம் வெகுவாக பாராட்டினார்.



தஞ்சாவூர், கீழவாசல் கொள்ளுப்பேட்டை தெருவைச் சேர்ந்த கவிதா, தனது இரண்டு பெண் குழந்தைகளுடன் மாலை, பெரிய கோயிலுக்கு வந்தார். கேரளாந்தகன் வாயிலுக்கும், ராஜராஜன் வாயிலுக்கும் இடையிலுள்ள புல் தரையில் கவிதாவும் இரண்டு பெண் குழந்தைகளும் அமர்ந்துள்ளனர். சிறிது நேரத்திற்குப் பிறகு இரண்டு குழந்தைகளும் அந்த இடத்தில் விளையாடியுள்ளனர். அப்போது, இரண்டு பேரில் நித்யஸ்ரீ(8) என்பவரை பாம்பு கடித்தது. இதையடுத்து நித்யஸ்ரீ வலியால் துடிக்க, அதிர்ச்சியில் கவிதா பதறியுள்ளார். உடனே அக்கம் பக்கத்தினர் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தனர். பெரியகோயில் முன்பகுதியில் எப்போதும் போக்குவரத்து நெரிசலாக இருக்கும். இதனால் ஆம்புலன்ஸ் வருவதில் தாமதம் ஏற்பட்டது. கோயிலுக்கு எதிரே போக்குவரத்து எஸ்.ஐ ராஜகண்ணன் அவர்கள் சாலை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். சிறுமியை பாம்பு கடித்த விஷயம் அவருக்கு தெரிந்தது. உடனடியாக அவர் ஆம்புலன்ஸ்க்காக காத்திருக்காமல் சமயோஜிதமாக யோசித்து சட்டென தனது டூவீலரில் பாம்பு கடித்த சிறுமி நித்யஸ்ரீயை ஏற்றிக்கொண்டு சென்றவர், தஞ்சாவூர் அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். இதையடுத்து சிறுமிக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கிருந்த மருத்துவர்கள் தாமதிக்காமல் சிறுமியை அழைத்து வந்த ராஜகண்ணனை பாராட்டினர். இதையடுத்து கவிதா, ராஜகண்ணனை கண்ணீர் மல்க கையெடுத்து கும்பிட்டுள்ளார். பின்னர், மேல் சிகிச்சைக்காக நித்யஸ்ரீ தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தற்போது நித்யஸ்ரீ நலமுடன் இருக்கிறார். எஸ்.ஐ ராஜகண்ணன் அவர்கள் நித்யஸ்ரீயை டூவீலரில் அழைத்து சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

இதையடுத்து எஸ்.பி.,ராஜராஜம், அவர்கள் எஸ்.ஐ ராஜகண்ணனை நேரில் அழைத்து துரிதமாக செயல்பட்டதற்கு தட்டிக் கொடுத்து சான்றிதழ் வழங்கி பாராட்டினர். இதைத் தொடர்ந்து சக போலீஸாரும் அவரை பாராட்டினர். இது குறித்து எஸ்.ஐ ராஜகண்ணன் அவர்கள் கூறுகையில்,சிறுமியை காப்பாற்ற வேண்டும் என்பது மட்டுமே எனக்கு இருந்தது. உரிய சிகிச்சைக்கு பிறகு சிறுமி நலமுடன் இருக்கிறார். என்னால் ஒரு உயிர் காப்பாற்றப்பட்டுள்ளதை நினைக்க பெரும் மகிழ்ச்சியாக உள்ளது" என்றார்.

... நிருபர்- விமல் ராஜ், கும்பகோணம்


**காவல் விரைவு செய்தி**

தமிழ் மாத இதழ்

TNTAM/25/A3638

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**ஸ்ரீதர்**
**9514213993**

இணை ஆசிரியர்: ஈஸ்வரி மணிமுத்து

உதவி ஆசிரியர்கள்: டேனியல் ராஜ், நாகராஜ்

நிர்வாக ஆசிரியர்: சொப்னா

தலைமை நிருபர்: நவீன்ராஜ்

நிருபர்கள் குழு: இளையகுமார், காதர் முகைதீன், அஜித், ராமலிங்கம், கதிரவன், சங்கர் பாண்டியன், முரளி மோகன், பிரவீன்குமார், புஷ்பராஜ், விமல்ராஜ், செல்வகணபதி, திருப்பதி சுரேஷ்ராஜன், ராமர், பாலச்சந்திரன், சக்திவேல், முரளி, பிரவீன்குமார், ரவி, வினோத்குமார், இளையராஜா, சரவணன், சந்திரக்குமார், பிரசன்னா, புருஷோத்தமன், கண்ணன், சேது, ஜெகதீஸ்வரன், பிரபாகரன், விஜயகுமார், விஷ்ணுகுமார், சந்திரபாபு, உதயசூரியன், ரமேஷ், விமல்ராஜ், ராஜேஷ், வடிவேல், மணிரத்தினம், செந்தில்குமார், சங்கரன், மணிகண்டன், சுரேஷ், சதீஷ்குமார், சேதுபிரகாஷ், புஷ்பராஜ், ஜெகன், நவநீதகிருஷ்ணன்

வடிவமைப்பு: கிருபாகரன்

**Email:**
kaavalviraivuseithi@kaavalviraivuseithi.com

Website :
www.kaavalviraivuseithi.com



சிறப்புக்கட்டுரைகள், மற்றும் பேட்டியின் கருத்துக்கள், அதைத் தெரிவித்தவர்களின் சொந்த கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு 'காவல் விரைவு செய்தி' நிர்வாகம் பொறுப்பல்ல.


## திருவள்ளூர் மாவட்ட செய்தி...

திருவள்ளூர். மார்ச்.

20.02.2026 திருவள்ளூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் திரு.விவேகானந்த சுக்லா, இ.கா.ப., அவர்களின் உத்தரவின் பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஹரிக்குமார் அவர்களின் தலைமையில் காவலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் இணைந்து உலக தாய்மொழி தினம் உறுதிமொழி ஏற்க்கப்பட்டது. மேலும் திருத்தணி காசிநாதபுரம் பகுதியில் (20.02.2026) இரவு ஒரு பெண்ணின் வீட்டுக்கு வாகனம் ஓட்ட வந்த நபர் (Acting driver) பக்கத்து வீட்டில் இருந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயற்சிசெய்துள்ளார். இந்த சம்பவத்தை அந்த பெண் அவரின் கணவரிடம் கூறியுள்ளார். இதையடுத்து அந்த பெண்ணின் கணவர் மற்றும் அவரது நண்பர்கள் அந்த நபரை தாக்கியுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்து மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இச்சம்பவம் தொடர்பாக தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நிருபர் - சுரேஷ்

## மதுரை மாவட்ட செய்திகள்...

மதுரை, மார்ச். மதுரை மாவட்ட காவல்துறையில் நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகளை தனிப்பட்ட முறையில் கண்காணித்து வழக்குகளுக்கு தண்டனை பெற்றுத்தரும் விதமாக நீதிமன்ற விசாரணை கண்காணிப்பு குழு (Trial Monitoring Committee) அமைக்கப்பட்டு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் படி நிலைகளில் நீதிமன்ற விசாரணை கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் பொறுப்பில் சம்மந்தப்பட்ட காவல் நிலைய வழக்குகளின் நீதிமன்ற விசாரணைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.



இந்நிலையில் மதுரை மாவட்டம் ஊமச்சிகுளம் உட்கோட்டம், அப்பன்திருப்பதி காவல் நிலையத்தில் கடந்த 2012 ம் வருடம் தாக்கலான கொலை வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றவாளிகள் மாணிக்கம் குருசாமி சுரேந்திரன் பரமேஸ்வரி ஆகியோருக்கு எதிராக மதுரை மாவட்டம், 6th ADJ Court குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி கொலை வழக்கில் ஈடுபட்ட குற்றத்திற்காக மேற்கண்ட குற்றவாளிக்கு A2 to A4 ஆயுள் தண்டனையும், ரூபாய் 5,000/-அபராதமும் விதித்து, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதன்பேரில் மேற்படி நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையை தொடர்ந்து கண்காணித்து வழக்கின் சாட்சியங்கள் அனைவரையும் முறையாக நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தி இவ்வழக்கில் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் துரிதமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு. முத்துகுமார் மற்றும் நீதிமன்ற தலைமை காவலர் திருமதி. கீதா ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டி உள்ளார்.



மேலும் மதுரை மாநகர காவல்... சென்னை அம்பத்தூர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது குடும்பத்தினருடன் அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சாமி தரிசனத்திற்கு வந்த போது, சுமார் 1 1/2 பவுன் மதிப்புள்ள இரண்டு ஜோடி தங்கதோடுகள் மற்றும் மூன்று தங்க நாணயங்கள் அடங்கிய பணப்பையை (Money Purse) கீழே தவறவிட்டதாக மீனாட்சியம்மன் கோவில் காவல்நிலையத்தில் புகார் தெரிவித்ததன் பேரில், பணியிலிருந்த பெண் சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் திருமதி. தனம் மற்றும் திருமதி. ஷீலா ஆகியோர் அங்கிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்த போது, வடமாநிலத்தை சேர்ந்த சுமார் 60 வயது மதிக்கத்தக்க நபர் எடுத்திருப்பது தெரிய வரவே அவரிடமிருந்து நகைகள் மற்றும் பணப்பையை பெற்று, மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர். திரு. ஜெ. லோகநாதன் இ.கா.ப அவர்கள் முன்னிலையில் (23.02.2026) புகார்தாரரிடம் ஒப்படைத்தனர். துரிதமாக செயல்பட்டு நகையை மீட்க உதவிய பெண் சிறப்பு சார்பு ஆய்வாளர்களை மாநகர காவல்ஆணையர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

... நிருபர்கள் - விஷ்ணுகுமார், சேது பிரகாஷ்

## தருச்சி மாவட்ட செய்திகள்...

திருச்சி, மார்ச்.



திருச்சி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட Cricket Net Practice Court -யை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்கள் (25.02.2026) திறந்து வைத்தார்.

திருச்சி மாவட்டம், மணப்பாறை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பாரதியார் நகர் மற்றும் இனாம்குளத்தூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட ஆலம்பட்டிபுதூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட வெவ்வேறு மாநாடுகளில், தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் நடத்துவது தொடர்பான அரசாணை எண். 5 (G.O. Ms. No. 5) -ல் குறிப்பிட்டுள்ள விதிகளை மீறியது தொடர்பாக மொத்தம் எட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1 திருச்சி மாவட்டம், இனாம்குளத்தூர் காவல்நிலையஎல்லைக்குட்பட்ட ஆலம்பட்டிபுதூரில் கடந்த 25.01.2026 அன்று தமிழர் தேசம் கட்சி சார்பில் நடத்தப்பட்ட முத்தரையர் அரசியல் அதிகார மீட்பு மாநாட்டை நிர்ணயிக்கப்பட்டிருந்த கால அளவைத் தாண்டி நடத்தியது தொடர்பாக ஒரு வழக்கும், மாநாட்டிற்கு வருகை தந்திருந்த வாகனங்கள் போக்குவரத்து விதிகளை மீறியும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அபாயகரமாகவும் இயக்கப்பட்டது தொடர்பாக (மொத்தம் 44 வாகனங்கள் மீது) இரண்டு வழக்குகள் என மொத்தம் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. திருச்சி மாவட்டம், மணப்பாறை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பாரதியார் நகரில் கடந்த 08.02.2026 அன்று நடைபெற்ற ஊராளி கவுண்டர் சமுதாய எழுச்சி மாநாட்டிற்கு காவல்துறை வழங்கிய அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேலாக நிகழ்ச்சியை நடத்தியது தொடர்பாக ஒரு வழக்கு மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனங்களை ஓட்டியது தொடர்பாக ஒரு வழக்கு என மொத்தம் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. திருச்சி மாவட்டம், இனாம்குளத்தூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட ஆலம்பட்டிபுதூரில் கடந்த 21.02.2026 அன்று நாம் தமிழர் கட்சி சார்பில் நடத்தப்பட்ட மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாட்டை அனுமதிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டி நடத்தியது தொடர்பாக ஒரு வழக்கும், தடை செய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களின் உருவப்படங்கள் அடங்கிய பிளக்ஸ் போர்டுகள் வைத்தது மற்றும் எவ்வித முன் அனுமதியுமின்றி, பிளக்ஸ் போர்டுகள் மற்றும் கொடிக்கம்பங்கள் நடப்பட்டது தொடர்பாக ஒரு வழக்கும், மாநாட்டிற்கு வருகை தந்த வாகனங்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், போக்குவரத்து விதிகளை மீறியும் இயக்கப்பட்டது தொடர்பாக (மொத்தம் 18 வாகனங்கள் மீது) ஒரு வழக்கு என மொத்தம் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது

மேற்கண்ட, மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கும் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் தலைமையில் காவல்துறை பாதுகாப்பு வழங்கப்பட்டு எந்தவொரு அசம்பாவிதமும் நடைபெறாத வண்ணம் நடத்தி முடிக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

... நிருபர் - புஷ்பராஜ்

## திருநெல்வேலி மாவட்ட செய்திகள்...



திருநெல்வேலி, மார்ச்.

திருநெல்வேலி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாதாந்திர ஆய்வு கூட்டம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.வி.பிரசண்ண குமார், IPS., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்குகளின் புலன் விசாரணை குறித்தும், நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்தும், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும், பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீதும், ரவுடிகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், நீதிமன்ற அலுவல்கள் குறித்தும் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு நடைபெற்றது.

முன்னதாக திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல்துறையின் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் காவலர்கள் அவசர காலங்களில் பணிக்கு செல்லும் இருசக்கர வாகனங்கள், உயர் அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்கள், நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறதா? என காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, வாகன ஓட்டுநர்களுக்கு முக்கிய அறிவுரைகள் வழங்கி, வாகனங்களின் நிறை குறைகளை கேட்டு தெரிந்து கொண்டார்.

பின்பு மாவட்டத்தில் கொலை, திருட்டு மற்றும் போக்சோ வழக்குகளில் உள்ள சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரிகளுக்கு தண்டனை பெற்று கொடுத்த காவல் அதிகாரிகள், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது மற்றும் போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட நபர்களை திறம்பட செயல்பட்டு கைது செய்தது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட காவல் ஆளிநர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர்கள் உட்பட மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 102 நபர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் அழைத்து நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், உதவி மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்கள், அரசு வழக்கறிஞர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

... நிருபர் - சங்கரன்

## தூத்துக்குடி மாவட்ட செய்திகள்...

தூத்துக்குடி, மார்ச்.

மாவட்ட குற்றப்பிரிவு - I மோசடி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும்



ரூபாய் 8,000/- அபராதம் விதித்து தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் IV தீர்ப்பு.

கடந்த 2023 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் அன்பு நகரை சேர்ந்த சிவராமன் 65/26 என்பவர் தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தை சேர்ந்த 4 இளைஞர்களிடம் அறிமுகமாகி இரயில்வேயில் வேலை வாங்கித் தருவதாக கூறி மொத்தம் ரூபாய் 26,50,000/- பணத்தை மோசடி செய்துள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட 4 இளைஞர்கள் அளித்த புகாரின் பேரில் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு 1-ல் மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கை காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -IV ல் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த மதிப்பிற்குரிய கனம் நீதிபதி திரு. பாக்கியராஜ் அவர்கள் (25.02.2026) மேற்படி எதிரி சிவராமன் குற்றவாளி என உறுதி செய்யப்பட்டு மோசடி குற்றத்திற்காக 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூபாய் 8,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்த மாவட்ட குற்றப்பிரிவு - I காவல் துணை கண்காணிப்பாளர் திரு. மயில்சாமி மற்றும் இவ்வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த மாவட்ட குற்றப்பிரிவு - I காவல் ஆய்வாளர் திருமதி. லட்சுமி பிரபா, அப்போதைய உதவி ஆய்வாளர் திருமதி. அனிதா ஆகியோரையும், நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் (பொறுப்பு) திரு. முருகப்பெருமாள் அவர்களையும், வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த தலைமை காவலர் திரு. வைரமணி ஆகியோரையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் இ.கா.ப அவர்கள் பாராட்டினார்.

தருவைக்குளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக சுமார் 2000 கிலோ மதிப்புடைய பீடி இலைகளுடன் வந்த சரக்கு வாகனத்தை பறிமுதல் செய்து சுங்கத்துறையினரிடம் ஒப்படைப்பு - தருவைகுளம் காவல் நிலைய போலீசார் நடவடிக்கை.

தருவைக்குளம் காவல் நிலைய போலீசார் (27.02.2026) இரவு தருவைக்குளம் சமத்துவபுரம் சோதனை சாவடியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது அவ்வழியாக வந்த ஒரு சரக்கு வாகனத்தை இயக்கி வந்த ஓட்டுநர் போலீசாரை கண்டதும் அருகில் உள்ள காட்டுப் பகுதியில் வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பியோடிள்ளார்.

உடனடியாக தருவைக்குளம் காவல் நிலைய போலீசார் அந்த வாகனத்தை சோதனை செய்ததில் அதில் சட்டவிரோதமாக சுமார் 2000 கிலோ மதிப்புடைய பீடி இலை பண்டல்கள் மற்றும் 240 கிலோ மதிப்புடைய சிகரெட் பண்டல்கள் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து மேற்படி கடத்திவரப்பட்ட பீடி இலை பண்டல்கள், சிகரெட் பண்டல்கள் மற்றும் சரக்கு வாகனம் ஆகியவற்றை தருவைகுளம் காவல் நிலைய போலீசார் (28.02.2026) சுங்கத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

... உதவி ஆசிரியர் - நாகராஜ்

## தேனி மாவட்ட செய்திகள்...



தேனி, மார்ச்.

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேஹா ப்ரியா, இ.கா.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இணைந்து "எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எப்போதும் தமிழ் என்ற நடைமுறைக் கொண்டுவர பாடுபடுவோம். தேமதுர தமிழோசை உலகமெங்கும் ஒலிக்க எந்நாளும் உழைத்திடுவோம். அனைத்து ஆவணங்களிலும் தமிழிலே கையொப்பமிடுவோம். குழந்தைகளுக்கு தமிழ் மொழியில் பெயர் சூட்டட பரப்புரை செய்திடுவோம். இணையற்ற தமிழுடன் இணையத் தமிழையும் காத்து வளர்ப்போம் என்று உலகத் தமிழ்மொழி நாளான இன்று உளமார உறுதி கூறுகிறேன். என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் உலக தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

சமூக வலைதளங்களில் மதம், சாதி பிரச்சனைகளை தூண்டும் விதமாகவும் மற்றும் அருவாள், பட்டாக்கத்தி ஆகிய ஆயுதங்களுடன் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாகவும் பதிவிடுபவர்களை தீவிரமாக கண்காணிக்கப்பட்டும் அதனை முற்றிலும் தடுக்கும்பொருட்டு காவல் துறை தலைவர், தென் மண்டலம், மதுரை அவர்களின் அறிவுறுத்தலின் பேரிலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரிலும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து அச்சுறுத்தல் மற்றும் பிரிவினை வாத கருத்துக்களை பதிவிட்டவர்கள் மீது உத்தமபாளையம், கூடலூர் வடக்கு, வீரபாண்டி, போடி தாலுகா, அல்லிநகரம், இராஜதானி ஆகிய காவல்நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்று சமூக வலைதளங்களில் சாதி, மத பிரச்சனைகளை தூண்டும் விதத்திலோ கருத்துக்கள் மற்றும் புகைப்படங்களை பதிவிடும் நபர்கள் மீது காவல்துறை கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் Dr.B.சினேஹப்ரியா, இ.கா.ப., அவர்கள் எச்சரித்துள்ளார். உங்களின் ஒவ்வொரு சமூகவலைதள பதிவுகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டுவருகிறது, சமூகவலைதளங்களை கவனமாகவும், பொறுப்புடனும் கையாளுங்கள்...

திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் Dr. P. சாமிநாதன், இ.கா.ப., அவர்கள், தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா, இ.கா.ப., அவர்கள் உடன் இருந்தார். ஆய்வின்போது காவல் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தடய அறிவியல் கூடம், கைரேகை நுண்ணறிவுப் பிரிவு, (PRISM - Precision Reconstruction and Investigation of Scene Material) மற்றும் Measurement Capturing Unit க்கான வன்பொருள் தொகுப்பு உபகரணங்கள் தொடர்பாக விரிவாக கேட்டறிந்து, அவற்றின் பயன்பாடு மற்றும் விசாரணை செயல்முறைகளில் வழங்கும் தொழில்நுட்ப உதவிகள் குறித்து பார்வையிட்டு, செயல்திறன் மற்றும் பயன்பாட்டு நிலையை ஆய்வு செய்தார்.



தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹா ப்ரியா,இ.கா.ப., அவர்கள், உத்தரவின்பேரில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சட்டம் மற்றும் ஒழுங்கை உறுதி செய்யும் வகையில், தேனி மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் காவல்துறையினர் தீவிர வாகனச் சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையின் போது சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் கவனமாக ஆய்வு செய்யப்பட்டதுடன், தேவையான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. தேர்தல் விதிமுறைகள் மீறப்படாதவாறு பணம், மதுபானம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்ட சட்டவிரோதப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகிறதா என சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அமைதியான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய காவல்துறையினர் இரவு பகலின்றி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பொதுமக்கள் தேர்தல் விதிமுறைகளை கடைபிடித்து காவல்துறையினருக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

... நிருபர் - வடிவேலு

## சிவகங்கை மாவட்ட செய்திகள்...



சிவகங்கை, மார்ச்.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. இரா. சிவ பிரசாத், இ.கா.ப., அவர்கள் திருப்பத்தூர் கோட்டம் எஸ்.எஸ். கோட்டை மாவட்ட எல்லை சோதனைச் சாவடியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.அப்போது அடிப்படை வசதிகளை ஆய்வு செய்து, வாகன சோதனைகளை தீவிரப்படுத்தவும், குறிப்பாக சட்டவிரோத மது மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் உட்கோட்டம், எஸ்.வி.மங்கலம் காவல் நிலையத்தில் குற்ற எண் 145/2018 ஆக பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில் (25.02.2026) விரைவு மகளிர் நீதிமன்றம் (POCSO) தீர்ப்பு வழங்கியது.

இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளி மாரிசாமி (43), சுத்தமடம், அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவருக்கு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 366(A), குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் பிரிவு 9 மற்றும் போக்சோ சட்டம் பிரிவு 5(l) r/w 6 ஆகிய பிரிவுகளின் கீழ் மொத்தம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூ.2,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தண்டனைகள் ஒரே நேரத்தில் அனுபவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவருக்கு ரூ.5,00,000 நஷ்டஈடு வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இவ்வழக்கில் திறம்பட விசாரணை நடத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த காவல் அதிகாரிகள் மற்றும் வழக்கு நடத்திய அரசு தரப்பு வழக்கறிஞரை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.சிவ பிரசாத், இ.கா.ப., அவர்கள் பாராட்டினார்.

... நிருபர் - ரமேஷ்

## இராமநாதபுரம் மாவட்ட செய்திகள்...



இராமநாதபுரம், மார்ச்.

இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்ப்பு முகாமில் காவல் கண்காணிப்பாளர் திரு. சந்தீஷ்,IPS., அவர்கள் பொதுமக்களிடம் புகார் மனுக்களை பெற்று உடனுக்குடன் தீர்வு காண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இராமேஸ்வரம் திட்டக்குடி பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைத்து, விபத்துகளைத் தடுக்கும் நோக்கில், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு பாதுகாப்பான மற்றும் ஒழுங்கையான பயணத்தை உறுதி செய்யும் வகையில் புதிய சாலை போக்குவரத்து சிக்னல் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



இராமநாதபுரம் மாவட்டம் இளஞ்செம்பூர் காவல் நிலையத்திற்குட்பட்ட பூக்குளம் பகுதியில் ஜெயமுருகன் என்பவரை தாக்கி காயப்படுத்திய வழக்கில் முத்துராமலிங்கத்திற்கு முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றம் 3 மாதங்கள் சிறைத் தண்டனை மற்றும் ரூ.5,000 அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.



இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் நகர் பகுதியில் பிரகாஷ் என்பவரை கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட மணிகண்டனுக்கு, இராமநாதபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5,500 அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயுதங்களை வைத்துக் கொண்டும், வாகனங்களில் சாகசம் செய்தும் சமூக வலைதளங்களில் வீடியோ பதிவேற்றம் செய்யும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் கண்காணிப்பாளர் திரு. சந்தீஷ் IPS., அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே 8 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில், குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை.

... இணை ஆசிரியர் - முருகேஸ்வரி

## திண்டுக்கல் மாவட்ட செய்திகள்

திண்டுக்கல், மார்ச்.

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2023-ம் ஆண்டு சிறுமியை காதலிப்பதாக அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த அம்பாத்துரை பகுதியைச் சேர்ந்த சக்திவேல் (24) என்பவரை செம்பட்டி காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப், இ.கா.ப அவர்களின் அறிவுறுத்தலின்படி செம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் திரு.சரவணன் அவர்கள், நீதிமன்ற தலைமை காவலர் திருமதி.கார்த்திகை வேணி அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.மைதிலி அவர்களின் சீரிய முயற்சியால் (24.02.2026) திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் குற்றவாளி சக்திவேல் என்பவருக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.



மேலும் 26.02.2026 திண்டுக்கல் மாவட்டம் பழனி அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2024-ம் ஆண்டு சிறுமிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வழக்கில் பழனி முத்து நாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் (எ) சின்னா (34) என்பவரை பழனி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப், இ.கா.ப அவர்களின் அறிவுறுத்தலின் படி பழனி அனைத்து காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.பாக்கியம் அவர்கள், நீதிமன்ற முதல் நிலைக்காவலர் திருமதி.இலக்கியா அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.மைதிலி அவர்களின் சீரிய முயற்சியால் (26.02.2026) திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் குற்றவாளி பிரகாஷ் (எ) சின்னா என்பவருக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 13 ஆண்டுகள் ஒரு மாத சிறை தண்டனை மற்றும் ரூ.20,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள்.

இந்த ஆண்டு 3 போக்சோ வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

... நிருபர் - ராமர்

## ஈரோடு மாவட்ட செய்திகள்...



ஈரோடு, மார்ச்.

ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. சுஜாதா அவர்களின் நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவில் கடந்த 11.01.2014 ம் தேதி பவானி, ஜம்பை, சத்தி மெயின் ரோடு, மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த செல்வராஜ் மகன் ராஜேஷ் (28) என்பவர் வெள்ளித்திருப்பூர், விராலிக்காட்டூர், மண்கரட்டு தோட்டத்தைச் சேர்ந்த குருசாமி மகன் ராஜேஸ்வரன் (42) மற்றும் பவானி, கண்ணாடிபாளையத்தைச் சேர்ந்த மணி மகன் சென்னியப்பன் (40) ஆகியோர், தங்களை மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் என்று கூறி, மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் வேலை வாங்கித்தருவதாக நம்பகமாக பேசி தன்னிடமிருந்து ரூ 7,00,000/- பெற்றுக்கொண்டு, வேலை வாங்கித்தராமல் ஏமாற்றி விட்டதாக கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்கண்ட எதிரிகள் இருவரையும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி வழக்கின் விசாரணையானது ஈரோடு இரண்டாம் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் இன்று 27.02.2026ம் தேதி மேற்படி குற்றவாளிகளான ராஜேஸ்வரன் மற்றும் சென்னியப்பன் ஆகியோருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ 10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

24.02.2026ம் தேதி கவுந்தபாடி, சித்தோடு மற்றும் அந்தியூர் காவல் நிலைய எல்லைகளில் நடத்தப்பட்ட தீவிர தேடுதல் வேட்டையில், சட்ட விரோதமாக விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக கீழ் கண்ட எதிரிகளை கைது செய்து அவர்கள் வசமிருந்து 6.30 கிலோ கிராம் கஞ்சா, பிளாட்டினா மோட்டார் சைக்கிள்- 1, செல்போன்கள் 6 மற்றும் பணம் ரூ 950/- பறிமுதல் செய்யப்பட்டது.

1. அப்துல் ரஹ்மான் கவுந்தப்பாடி, 2. மோகன்ராஜ் கவுந்தப்பாடி 3. மூர்த்தி சித்தோடு.4. மூர்த்தியின் மகன் (இளன் சிறார்) 5. பர்ஹத் அலி அந்தியூர் ஆகியோரை நிலையம் அழைத்து வந்து ஐந்து பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

ஈரோடு மாவட்டம், கருங்கல் பாளையம், ஜானகி அம்மாள் லே-அவுட்டை சேர்ந்த முரளிதரன் மகன் அஜித்குமார் (27) என்பவர் மீது பாலியல் குற்றத்தில் ஈடுபட்டதற்காக ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்ஸோ வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைக்கப்பட்டார். மேற்படி எதிரியின் மீது ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி சுஜாதா அவர்களின் பரிந்துரையின்படி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் கடந்த 23.02.2026ம் தேதி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் குற்றவாளியை 24.02.2026ம் தேதி கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டது என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில்தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஈரோடு நகர உட்கோட்டம், ஈரோடு தாலுக்கா காவல் நிலையம், ரங்கம்பாளையம் மேம்பாலம் அருகில் அழுகிய நிலையில் நிர்வாணமாக பெண் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக கடந்த 10.02.2026 ம் தேதி கிடைத்த புகாரின் பேரில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி சுஜாதா அவர்களின் உத்தரவின் பேரில், குற்றவாளியை கண்டுபிடிக்க ஈரோடு டவுன் காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளியை கண்டுபிடிக்க தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், 23.02.2026ம் தேதி மேற்படி கொலையான நர்மதா(23), த/பெ. செல்வராஜ், பிச்சாண்டாம்பாளையம், வாய்க்கால் மேடு, பெருந்துறை ரோடு, ஈரோடு என்பரை கொலை செய்த ரங்கம்பாளையம், பாரதிநகர், ராஜீ மகன் தீபன்குமார் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தபட உள்ளது.

மேலும் அறச்சலூர் காவல் நிலைய சரகத்தில் போக்சோ குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அம்மாபாளையம், எஸ்.சி.காலனியை சேர்ந்த இசக்கியன் மகன் அன்புரோஸ்(36) என்பவரை கடந்த 12.04.2021 ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது.

மேற்படி வழக்கின் விசாரணையானது ஈரோடு மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் 25.02.2026 தேதி மேற்படி குற்றவாளியான அன்புரோசுக்கு வழக்கில் உள்ள இரு சட்டப்பிரிவுகளுக்கும் தலா 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1,00,000/- அபராதமும் விதித்தும், அதனை ஏககாலத்தில் அனுபவிக்கவும், மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு சார்பில் ரூ 5,00,000/- நிவாரண தொகையாக வழங்கவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது .

... நிருபர் - பாலசந்தர்,

## திருப்பூர் மாவட்ட செய்திகள்



திருப்பூர், மார்ச்.

திருப்பூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பொதுமக்களின் மனுக்கள் மீதான விசாரணையை நடத்தினார்.

08.02.2026 அன்று இரவு உடுமலை வெணசப்பட்டி, விசாகா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிலாளர் தங்கும் விடுதியில் ஒடிசா மற்றும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பியதை குறித்து உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளர், ஒடிசாவைச் சேர்ந்த சில தொழிலாளர்களிடம் கேள்வி எழுப்பியதால் வாய்த்தகராறு ஏற்பட்டது. பின்னர் அது கைகலப்பாக மாறி, ஒடிசாவைச் சேர்ந்த ஏழு பேர் மூன்று தொழிலாளர்களை தாக்கியுள்ளனர். காயமடைந்த மூவரும் உடனடியாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு உத்தரப் பிரதேச மாநிலம், ராய்பரேலி மாவட்டத்தைச்சேர்ந்த சல்மான் என்பவரை பரிசோதித்த மருத்துவர் இருந்துவிட்டதாக தெரிவித்தார். காயமடைந்த நபரின் புகாரின் அடிப்படையில் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சம்பவத்தில் தொடர்புடைய ஏழு எதிரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. குன்னத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சம்பவம் குறித்து: மேலும் 08.02.2026 அன்று இரவு ஸ்ரீரத்தினம் ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து கொண்ட ஒரே அறையில் தங்கியிருந்த ஒடிசா மாநிலத்தைச்சேர்ந்த மூன்று தொழிலாளர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டதாகவும், அவர்களின் தங்கும் அறையில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி, அதில் எதிரிகள் ஒடிசா மாநிலம் பாலாங்கீர் மாவட்டத்தைச் சேர்ந்த அமித் நாக் என்பவரை கொலை செய்துள்ளனர்.

மேற்படி தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு குன்னத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் காவலர்கள் உடனடியாக சென்று விசாரித்து வழக்கு பதிவு செய்து, சம்பவத்தில் தொடர்புடைய இரண்டு எதிரிகள் கைது செய்யப்பட்டனர், வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

... நிருபர் - செந்தில்குமார், நவநீதகுமார்

## தருமபுரி மாவட்ட செய்திகள்



தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் 25.02.2026 ஆம் தேதி காலை 10.00 மணி முதல் 14.00 மணி வரை தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மகேஸ்வரன்,B.Com. BL., அவர்களின் தலைமையில் பொதுமக்களின் குறை தீர்க்கும் முகாம் (பெட்டிஷன் மேளா) நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ஸ்ரீதரன் அவர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். இப்பெட்டிஷன் மேளாவில் பொதுமக்களால் வழங்கப்பட்ட 55 மனுக்கள் மீது விசாரணை செய்யப்பட்டு, 55 மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டது. மேலும் இன்று புதிதாக 44 மனுக்கள் பெறப்பட்டன

தர்மபுரி மாவட்டம், அதியமான் கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மிட்டாரெட்டி அள்ளிமயில் கொட்டாயில் வசித்து வரும் வஜ்ஜிரவேல் என்பவர் குறித்து கிடைத்த தகவலின் பேரில், காவல் உதவி ஆய்வாளர் தலைமையில் அவரது வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டு, கட்டிலின் அடியில் ஊசி, சிரிஞ்சி, குளுக்கோஸ் பாட்டில், மருந்து பாட்டில்கள் மற்றும் மருந்து குப்பிகள் கைப்பற்றப்பட்டன. விசாரணையில், அவர் முறையான மருத்துவக் கல்வி மற்றும் உரிய அனுமதி இன்றி போலியாக மருத்துவம் பார்த்து வந்ததும், ஏற்கனவே இதேபோன்ற போலி மருத்துவம் தொடர்பான குற்றத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவர் என்பதும் தெரிய வந்தது. இதன் அடிப்படையில், அவரை கைது செய்து, கைப்பற்றப்பட்ட மருத்துவப் பொருட்களுடன் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டடார்.

இவர் போதை ஊசிகளை பயன்படுத்தியவர் இல்லை என்பதும், முறையான மருத்துவக் கல்வி மற்றும் அனுமதி இன்றி போலியாக மருத்துவம் பார்த்த குற்றத்திற்காகவே கைது செய்யப்பட்டுள்ளார் என தர்மபுரி மாவட்ட காவல்துறை சார்பாக தெளிவுபடுத்தப்படுகிறது.

... நிருபர் - சுரேஷ் ராஜன், செல்வகணபதி

## கள்ளக்குறிச்சி மாவட்ட செய்திகள்





கள்ளக்குறிச்சி, மார்ச்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காவல்துறை பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினருக்கு வருகின்ற சட்டமன்றத் தேர்தல்-2026 விதிமுறைகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

25.02.2026-ந் தேதி காலை கள்ளக்குறிச்சியில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அரவிந்த் அவர்கள் தலைமையில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினருக்கு தேர்தல் விதிமுறைகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் 48 பறக்கும் படை குழுக்களும், 36 நிலையான கண்காணிப்பு குழுக்களும் என மொத்தம் 84 குழுக்களில் 168 காவலர்கள் சுழற்சி முறையில் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தல் ஜனநாயக முறைப்படி பாதுகாப்பான முறையில் நடைபெற தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும் நாளிலிருந்து தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு மாவட்டத்தில் வாக்காளர்களுக்குப் பணம், பரிசுப் பொருட்கள் விநியோகிப்பதைத் தடுக்கவும் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் அல்லது பொருட்களை பறிமுதல் செய்யவும், வெளிப்படைத்தன்மையுடன், கண்காணிப்பு கேமராக்கள் உதவியுடன், பாரபட்சமின்றி பணியாற்றிட அறிவுரை வழங்கினார். இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன் மற்றும் தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள காவலர்களும் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்த சம்பவம் தொடர்பான விளக்கம்.

திருநாவலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காந்திநகர் ரயில்வே கேட் அருகில், ஒரு முதியவரை சில இளைஞர்கள் தாக்குவது போன்ற காணொளி சமூக வலைதளங்களில் பரவி வருவதாக தகவல் பெறப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கடந்த 27.02.2026 அன்று சுமார் 1500 மணியளவில், பாதூர் - காந்திநகர் பகுதியில் வசிக்கும் காசிநாதன் (66) என்பவர், காந்திநகர் பெட்ரோல் பங்க் அருகே ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது, சில இளைஞர்கள் அவரிடம் பீடி கேட்டதாகவும், பீடி இல்லை என தெரிவித்ததையடுத்து வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரியவந்தது. அதன் தொடர்ச்சியாக அவரை கையால் தாக்கியதாகவும் கண்டறியப்பட்டது. மேலும், காசிநாதன் அவர்கள் வீட்டிற்கு செல்லும் போது, காந்திநகர் ரயில்வே கேட் அருகில் மீண்டும் சில இளைஞர்களால் தாக்கப்பட்டதாகவும், அருகில் இருந்த அவரின் உறவினர் தலையிட்டு சம்பவத்தைத் தடுத்து நிறுத்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது. காயமடைந்த காசிநாதன் அவர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக, பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 (SC/ST PoA Act) கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் தொடர்புடைய மேலும் மேலும் இரண்டு நபர்களை கைது செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பவம் நடைபெற்ற பகுதியில் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு. நிலைமை அமைதியாக உள்ளது. மேலும் ரயில்வே கேட்டில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

... நிருபர் - முரளி

## தென்காசி மாவட்ட செய்திகள்

தென்காசி, மார்.

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் கஞ்சா ஆகியவற்றின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மாதவன் T.P.S., அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19.02.2026 ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாப்பான்குளம் பகுதியில் சட்டவிரோதமாக புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காவல்துறையினர் திடீர் சோதனை





நடத்தியதில் விற்பனைக்காக புகையிலை பொருட்களை பதுக்கி வைத்திருந்த பெருமாள் என்பவரின் மகன் சுப்புதுரை(38) என்பவரை கைது செய்து பதுக்கி வைத்திருந்த 24.300 கிலோ எடை கொண்ட ரூ.12,960 மதிப்பிலான அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டதில் அவர் செட்டிகுளத்தை சேர்ந்த சரவணன் (45) மற்றும் செல்வக்கனி (30) ஆகியோரிடம் இருந்து வாங்கியது தெரியவந்தது இது தொடர்பாக மேற்படி மூன்று நபர்கள் மீதும் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் புகையிலை பொருட்கள் எங்கிருந்து வாங்கிவரப்பட்டது குறித்தும் இதில் தொடர்புடையவர்கள் குறித்தும் விசாரித்து வருகின்றனர்.

மேலும் தென்காசி மாவட்டம், சைபர் கிரைம் காவல் நிலையத்தில் ஆன்லைன் மூலமாக பகுதி நேர வேலை வாய்ப்பு என்று கூறி மோசடியில் ஈடுபட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளான சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ராஜசேகரன் என்பவர் மகன் ஹரிஷ்பாண்டி (23), இளையான்குடி முருகன் என்பவரின் மகன் தேவா(27), யூசுப் என்பவரின் மகன் ஜாகித் அகமது (29) மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ராஜேந்திரன் என்பவரின் மகன் ஆவுடையப்பன் @ மனோஜ் (39) ஆகியோர் மீது பிரிவு 14 தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மாதவன் T.P.S., அவர்கள் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் திரு.ஏ.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின் பேரில் மேற்படி நான்கு குற்றவாளிகள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்..

... நிருபர் - மணிரத்தினம்

## .... திருவண்ணாலை மாவட்ட செய்திகள் ....

திருவண்ணாமலை, மார்ச்.

23.02.2026) திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.வி.சுதாகர், இ.கா.ப., அவர்கள் மேற்பார்வையில், (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு) கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.



அண்ணாதுரை (பொறுப்பு) அவர்களின் வழிகாட்டுதலின்படி, சைபர் கிரைம் பிரிவு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. மணிமாறன் அவர்கள் தலைமையில் சிவஜோதி கல்வி நிறுவனம், செங்கம், மாணவர்களுக்கு சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் காவல் உதவி செயலியின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டது.

19.02.2026 அன்று மாலை 06.30 மணியளவில், திருவண்ணாமலை மாவட்டம், கடலாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காஞ்சி கிராம பேருந்து நிறுத்தம் அருகில், அஃப்ருக், த/பெ லால் என்பவர் ஆட்டோவில் பூண்டு, வெங்காயம் ஆகிய பொருட்களை பொதுமக்கள், வாகன ஓட்டிகள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையில் நிறுத்தி விற்பனை செய்து கொண்டிருந்துள்ளார். அந்த நேரத்தில், அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கடலாடி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. விஸ்வநாதன் மற்றும் காவலர் (1213) திரு. கஜேந்திரன் ஆகியோர், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஆட்டோவினை அங்கிருந்து அகற்றுமாறு, அஃப்ருக்கிடம் அறிவுறுத்தியுள்ளனர். ஆனால், அஃப்ருக், அவரது மனைவி பர்வீன் மற்றும் குடும்பத்தினர் அதனை ஏற்க மறுத்து மேற்படி காவலர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும், காவலர்களின் விசாரணையில், அஃப்ருக், என்பவர் மீது சட்டவிரோத மணல் திருட்டு தொடர்பான வழக்கு ஒன்று கடலாடி காவல் நிலைய குற்ற எண் 31/2026-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கில் அவர் தலைமறைவு எதிரியென தெரியவந்ததின் பேரில், அவரை மேற்படி காவலர்கள் விசாரணைக்காக அழைத்து செல்ல முயன்ற போது, அவரது மனைவி பர்வீன் மற்றும் குடும்பத்தினர் தலையிட்டு தடுத்தபோது, அஃப்ருக்கின் கை தவறுதலாக அவரது மனைவியின் முகத்தில் பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பான காணொளி ஒன்று சமூகவளைதளங்களில் பகிரப்பட்டு, அதில் மேற்படி காவலர்கள் இருவரும் சாலையோர வியாபாரி மீது தாக்குதல் நடத்தியது போன்று தவறுதலாக சித்தரிக்கப்பட்டுள்ளது, இந்த சம்பவத்தின் போது மேற்படி காவலர்கள் தங்கள் கடமையை செய்தனரேயன்றி காணொளியில் தவறுதலாக விவரிக்கபட்டுள்ளவாறு எந்தவித செயலிலும் ஈடுபடவில்லை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

... நிருபர் - மணிகண்டன்

## அரியலூர் மாவட்ட செய்திகள்

அரியலூர், மார்ச்.

கடந்த 2015ஆம் ஆண்டு அரியலூர் மாவட்டம் கயர்லாபாத் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கடுகூர் கிராமத்தை சேர்ந்த பழனியாண்டி (தற்போதைய வயது 63. அதே ஊரைச் சேர்ந்த செல்வராஜ் வயது 58 ஆகிய இருவரும் உறவினர்கள். இவர்களுக்கிடையே நிலத்தகராறு தொடர்பான முன்விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் கடந்த 11.04.2015 அன்று பழனியாண்டி பிரச்சனைக்குரிய நிலத்தில் இருந்தபோது செல்வராஜ் மற்றும் செல்வராஜின் மனைவி அழகுமதி (வயது 56) ஆகிய இருவரும் பழனியாண்டி-யை மோசமான வார்த்தைகளால் திட்டியுள்ளனர். இதனைத் தொடர்ந்து செல்வராஜ், பழனியாண்டி- யை தலையில் அரிவாளால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இக்குற்ற சம்பவம் குறித்து கயர்லாபாத் காவல் நிலையத்தில் அப்போதைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கமலக்கண்ணன் அவர்கள் வழக்கு பதிந்து விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். இவ்வழக்கு குறித்த விசாரணை அரியலூர் கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் கயர்லாபாத், காவல் உதவி ஆய்வாளர் திரு.சுந்தரமூர்த்தி அவர்கள் எதிரிகள் செல்வராஜ் மற்றும் அழகுமதிக்கு எதிராக அனைத்து சாட்சிகளையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து ஆதாரங்களையும் சமர்ப்பித்தார். இவ்வழக்கில் 27.02.2026ஆம் தேதி அரியலூர் கூடுதல் மகிளா நீதிமன்ற நீதிபதி திருமதி.ஜெயப்பிரதா அவர்கள் குற்றவாளி செல்வராஜுக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 2000 ரூபாய் அபராதம் விதித்தும் குற்றவாளி அழகுமதிக்கு ரூபாய் 1500/- அபராதம் விதித்தும் தீர்ப்பளித்தார்கள்.



அரியலூர் மாவட்டம் தா.பழூர் அருகேயுள்ள சோழமாதேவி கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன் மகன் ராதாகிருஷ்ணன் வயது 52 அவரது குடும்பத்திற்கும், அவரது பக்கத்து வீட்டுக்காரரான கருத்தான் மகன் ராஜகோபால் வயது 62 என்பவர் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் 22.01.2023 அன்று மீண்டும் இவர்கள் இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டபோது ராஜகோபால் தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் ராதாகிருஷ்ணனின் தலையில் வெட்டி கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இச்சம்பவம்குறித்து தா.பழூர் காவல் நிலையத்தின் அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.கதிரவன் அவர்கள், வழக்கு பதிவு செய்து, எதிரி ராஜகோபாலை கைது செய்து சிறையில் அடைத்தார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதில் தா.பழூர் தற்போதைய காவல் ஆய்வாளர் திரு.சிக்கந்தர் பாஷா அவர்கள் எதிரி ராஜகோபாலுக்கு எதிராக அனைத்து சாட்சிகளையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்தார்கள். இந்நிலையில் 26.02.2026 அன்று ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்ற நீதிபதி.திரு.ராஜ மகேஷ்வர் அவர்கள் குற்றவாளி ராஜகோபாலுக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூபாய் 1000/-அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்கள். இதனைதொடர்ந்து குற்றவாளி ராஜகோபாலை அரியலூர் மாவட்ட காவல்துறையினர் திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

... நிருபர் - இளைய குமார்

## கடலூர் மாவட்ட செய்திகள்

கடலூர், மார்ச்.

கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஜெயக்குமார் IPS அவர்கள் தலைமையில்,



25.02.2026 தேதி கடலூர் மாவட்டம் காவல் அலுவலக கூட்ட அரங்கில் பெட்டிஷன் மேளா நடைபெற்றது. காவல் கண்காணிப்பாளர் திரு. ஜெயக்குமார் IPS அவர்களிடம் பொதுமக்கள் கொடுத்த புகார் மனுக்கள் சம்பந்தமாக காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடியாக விசாரணை மேற்கொண்டு, புகார் மனுக்கள் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் உடனடியாக விசாரணை மேற்கொண்டு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார். காவல் அதிகாரிகள் பங்கேற்றனர்.



கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம் 18.02.2026 தேதி கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஜெயக்குமார் IPS அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், காவல் நிலையங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் விரைந்து முடிக்க வேண்டும் எனவும் கடலூர் மாவட்ட காவல் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். கலந்தாய்வு கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு. கோடீஸ்வரன், திரு. ரகுபதி மற்றும் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் பங்கேற்றனர். கலந்தாய்வு கூட்டத்தில் கடலூர் மாவட்ட காவல்துறையில் கடந்த ஜனவரி மாதம் மெச்சதகுந்த பணிபுரிந்த துணை காவல் கண்காணிப்பாளர் திரு. தமிழ் இனியன், காவல் ஆய்வாளர்கள் திரு. அம்பேத்கர், திரு. சந்திரன், திரு. சந்துரு, திரு. விஜயக்குமார், திரு. கோவிந்தசாமி, உதவி ஆய்வாளர்கள் திரு. பிரசன்னா, திரு. ஆனந்தகுமார், திரு. ராஜா, திரு. டைமன்துரை, திரு. செல்வகுமார், திரு. தவச்செல்வம், திரு. அறிவழகன், திரு. செல்வநாயகம், திரு. ராமஜெயம், கைரேகை பிரிவு உதவி ஆய்வாளர் திரு. வினோத்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், காவலர்கள் என 71 காவல்துறையினருக்கு கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஜெயக்குமார் IPS அவர்கள் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

... நிருபர்கள் - புஷ்பராஜ், விமல்ராஜ்

## பெரம்பலூர் மாவட்ட செய்திகள்

பெரம்பலூர், மார்ச்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 09.02.2026-ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. அனிதா அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் கூடுதல்



காவல் கண்காணிப்பாளர்கள் திரு.கோபாலசந்திரன் (தலைமையிடம்), திரு.பாலமுருகன் (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு) ஆகியோர்கள் மற்றும் காவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் இணைந்து தீண்டாமை உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

மேற்படி உறுதிமொழியின்படி "இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மனிதனை வணிகப் பொருளாக்குதலும், வலுக்கட்டாயமாக வேலை சுமத்தும் வழக்கங்களும், கடன் பிணையத் தொகை வழங்கி கட்டாயப் பணிக்கு வற்புறுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாக வரையறை செய்யப்பட்டுள்ளதால், கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழித்திடும் நோக்கத்தை கருத்திற் கொண்டு, சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், கொத்தடிமைத் தொழிலாளர் முறை எந்தத் தொழிலில் இருந்தாலும் அதனை அடையாளங்கண்டு தக்க நடவடிக்கை எடுக்க முழு முயற்சி செய்வேன் என்றும், எந்தத் தொழிற்சாலையிலும் தொழிலாளர்களுக்கு முன்பணம் கொடுத்து பணியமர்த்துவதைத் தவிர்க்க வலியுறுத்துவேன் என்றும், கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களின் முழுமையான மறுவாழ்விற்காகப் பணியாற்றுவேன் என்றும், இந்திய அரசமைப்புச் சட்டம் வகை செய்துள்ள அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் உரித்தாக்குவதற்கு, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தைச் சீரிய முறையில் செயற்படுத்த உறுதுணையாக இருந்து கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு சிறப்புடன் செயற்படுவேன் என்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன். என்று கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

மேலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையம், மாவட்ட ஆயுதப்படை மற்றும் காவல்துறை அலுவலகங்களில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.வே.பாலகிருஷ்ணன் இ.கா.ப. அவர்கள் 21.02.2026ஆம் தேதி பெரம்பலூர் மாவட்ட ஆயுதப்படையில் உள்ள பண்டக சாலை, உடற்பயிற்சி நிலையம், பெரம்பலூர் நகர காவல்நிலைய பதிவேடுகள், CCTNS 2.O மற்றும் வரவேற்பாளர் அறை மற்றும் மாவட்ட காவல் அலுவலக பண்டக சாலை ஆகியவற்றை பார்வையிட்டு அந்தந்த அலுவலக அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பதிவேடுகள்



மற்றும் பராமரிப்புகள் குறித்து தகுந்த அறிவுரைகள் வழங்கினார்கள்.

இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. அனிதா அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.கோபாலசந்திரன் (தலைமையிடம்) மற்றும் தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

... நிருபர் - உதயசூரியன்

## தாம்பரம் மாநகர காவல் செய்திகள்

தாம்பரம், மார்ச்.

சினிமா தயாரிப்பு நிறுவனத்திடம் ரூ. 21.75 கோடி மோசடி மற்றும் கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் இருவர் கைது.



Santhosa Reddy, A/45 s/o E.V. Perumal Samy

Vinod, A/52 s/o Vasu

வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் லிமிடெட் (Vels Film International Limited) நிறுவனத்தின் மேலாளர் திரு. பி. குணசேகரன் என்பவர் ஈ.வி.பி. சந்தோஷ் ரெட்டி மற்றும் அவரது மேலாளர்கள், செம்பரம்பாக்கம் கிராமத்தில் தங்களுக்குச் சொந்தமான 34 ஏக்கர் நிலம் மற்றும் சினிமா தியேட்டர் வளாகம் இருப்பதாகவும், அந்தச் சொத்தின் மீது எல்.ஐ.சி (LIC) ஹவுசிங் ஃபைனான்ஸில் உள்ள கடனை செலுத்த வேண்டியுள்ளதாலும், மேலும், மேற்படி இடத்தில் வேல்ஸ் நிறுவனத்தின்பேரில் பொழுதுபோக்கு வளாகம் மற்றும் தியேட்டர்கள் கட்டபோவதாகவும் கடந்த ஜூன் 25-ஆம் ஆண்டு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு அதன்பேரில் ரூ.21.75 கோடியை வேல்ஸ் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டு ஒப்பந்தத்தின்படி மேம்பாட்டு பணிகள் செய்ய எந்தவொரு சம்மந்தப்பட்ட ஆவணமும் தராமல் காலம் தாழ்த்தி வந்து பின்பு ஒப்பந்தத்தை மனுதாரரின் சம்மதமின்றி ரத்து செய்து, மனுதாரரை ஏமாற்றிவிட்டு, மேற்படி இடத்திலிருந்து வெளியேற சொல்லி மிரட்டியுள்ளதாக கொடுத்த புகாரின்பேரில், தாம்பரம் மத்திய குற்றப்பிரிவில் குற்ற எண்-36/2026 U/s 318(4),351(2),324(5),336(2),336(3),r/w 111 BNS ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் எதிரிகளைக் கைது செய்ய தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் முனைவர் திரு. அமல்ராஜ், I.P.S., அவர்களின் உத்தரவுப்படி தனிப்படை அமைக்கப்பட்டு தேடியதில் E.V.P.சந்தோஷ் ரெட்டி வேளச்சேரி மெயின் ரோடு, கிண்டி, சென்னை மற்றும் வினோத், ஏகாட்டூர், OMR, சென்னை ஆகியோரை 08.02-2026, கைது செய்து, விசாரணை செய்ததில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், இருவரையும் சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடுவர் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டு, 20.02.2026 முடிய நீதிமன்றக் காவலுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு எதிரியான கிரண்ராஜ் என்பவரைத் தனிப்படை போலீசார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

... உதவி ஆசிரியர் - டேனியல்ராஜ்

## கிருஷ்ணகிரி மாவட்ட செய்திகள்

கிருஷ்ணகிரி, மார்ச்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி காவல் நிலைய பகுதியில் போலீசார் ரோந்து அலுவலில் இருந்தபோது இரண்டு நபர்கள் விலங்குகளை வேட்டையாடும் நாட்டுத் துப்பாக்கி எடுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் கும்மளாபுரம் சோதனை சாவடி அருகே சென்று கொண்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பையில் நாட்டு துப்பாக்கி மற்றும் குண்டுகள் இருந்தது. அனுமதியின்றி நாட்டுத்துப்பாக்கி வைத்திருந்த இரண்டு நபர்களை கைது செய்து அவர்களிடமிருந்து நாட்டு துப்பாக்கி ஒன்று , ஏழு குண்டுகள் பறிமுதல் செய்து வழக்கு பதிந்து இரண்டு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்



பர்கூர் காவல் நிலைய பகுதியில் ஜெகதேவி பேருந்து நிலையம் அருகே போலீசார் வாகன சோதனை செய்த போது அவ்வழியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ரூ.21,800/- ரூபாய் மதிப்பிலான புகையிலை பொருட்கள் இருந்தது, வெளி மாநிலத்திலிருந்து புகையிலை பொருட்கள் கடத்தி வந்த நபரை கைது செய்து வாகனத்துடன் புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.



சிப்காட் காவல் நிலைய பகுதியில் ஜூஜூவாடி சோதனை சாவடி அருகே போலீசார் வாகன சோதனை செய்த போது அவ்வழியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ரூ.82,440/- ரூபாய் மதிப்பிலான புகையிலை பொருட்கள் இருந்தது, வெளி மாநிலத்திலிருந்து புகையிலை பொருட்கள் கடத்தி வந்த இரண்டு நபர்களை கைது செய்து வாகனத்துடன் புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர் மேலும்சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ஓசூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு போலீசார் ரோந்து பணியில் இருந்த போது ஜூஜூவாடி சோதனை சாவடி அருகே வாகன தணிக்கையில் இருந்தபோது அவ்வழியாக வந்த நபரை சோதனை செய்தபோது அந்த நபர் கஞ்சா வைத்திருந்தார். கஞ்சா வைத்திருந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து 3 கிலோ 300 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்குப்பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

காவேரிப்பட்டினம் காவல் நிலைய பகுதியில் கோவில் திருவிழாவின் போது இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட தகராறில் கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி தர்மபுரி மாவட்ட சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கின் இரண்டு எதிரிகள் மேலும் பல குற்ற செயல்களில் ஈடுபடலாம் என கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. தங்கதுரை அவர்களின் பரிந்துரையின் பேரில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. தினேஷ்குமார், இ.ஆ.ப., அவர்களிடம் உத்தரவு பெற்று சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள இரண்டு எதிரிகள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தேன்கனிக்கோட்டை காவல் நிலைய பகுதியில் 23.10.2017ஆம் தேதி கொலை செய்த வழக்கினை விசாரித்து வந்த ஓசூர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்கள் 23.02.2026ஆம் தேதி ஆறு எதிரிகளுக்கு கொலை செய்த குற்றத்திற்காக இரட்டை ஆயுள் தண்டனையும், + ரூ.1,20,000/- ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். போலீசார் எதிரிகளை சிறையில் அடைத்தனர்.

... நிருபர் - ஜெகதீஸ்வரன்

## கோவை மாவட்ட செய்திகள்




கோவை, மார்ச்.

கோவை மாநகர துப்பறியும் மோப்பநாய் பயிற்சி மையத்தில் 6 மாத அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி முடிந்து, காவல் மோப்பநாய்கள் மற்றும் அதன் பயிற்றுநர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்கு பணி புரிய புறப்பட்டனர் மேலும் கோவை தொடர் குண்டு வெடிப்பு தின அனுசரிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் சிவராத்திரி தின நிகழ்ச்சிகள் தொடர்பாக கோவையில் பாதுகாப்பு வளர்த்தப்பட்டுள்ளது அதன் ஒரு பகுதியாக ஙிஞிஷி குழு மோப்ப நாய் மற்றும் கழிவுகள் உதவியுடன் நகரின் முக்கிய இடங்களில் கோவை மாநகர காவல்துறையினர் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர் கோவை மாநகர காணாமல் போன தங்கச் செயினை,ஒரு மணி நேரத்திற்குள் உடனடியாக நடவடிக்கை எடுத்து கண்டுபிடித்து உரியவரிடம் ஒப்படைத்த காவல் அதிகாரி மற்றும் ஆளினருக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பணவெகுமதி வழங்கப்பட்டது.

... நிருபர் - சங்கரபாண்டியன், முரளி மோகன், பிரவீன்குமார்

## கன்னியாகுமரி மாவட்ட செய்திகள்

கன்னியாகுமரி, மார்ச்.

6 வயது குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்திய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். ஸ்டாலின் IPS அவர்களின் நிமிர் (The Rising Team)

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். ஸ்டாலின் IPS அவர்கள் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும் போக்சோ குற்றங்கள் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்கும் நோக்கில் நிமிர் ( The Rising Team)* தீவிர போக்சோ குற்ற விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தை தொடங்கி வைத்தார்கள்.




அதில் ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் தலா மூன்று பெண் காவலர்கள் வீதம் 15 பெண் காவலர்கள் போக்சோ தொடர்பான குற்றங்களையும் அதற்குண்டான தண்டனைகளையும் எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன. மேலும் ஒரே ஒரு பெற்றோர் மட்டும் இருக்கும் குழந்தைகள் எண்ணிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு உதவுதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். இவ்வாறு நாகர்கோவில் பகுதியில் விழிப்புணர்வு செய்யும்பொழுது ஒரு தம்பதியினர் தங்களது 16 வயது மகளுக்கு திருமணம் ஏற்பாடு செய்ததை கண்டறிந்தனர். அத்தம்பதியினரிடம் குழந்தை திருமணத் தடை சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தி நடைபெறவிருந்த திருமணத்தை தடுத்து நிறுத்தினர். சிறப்பாக செயல்பட்டு குழந்தை திருமணத்தை தடுத்த நிமிர் ( The Rising Team) குழுவினரே மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். ஸ்டாலின் IPS அவர்கள் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.அதன் தொடர்ச்சியாக நாகர்கோவில் வடசேரி பேருந்து நிறுத்தம் குறிஞ்சி பஜார் அருகே பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவிலக்கு போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் சுமார் 200 கிராம் எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.அதில் தெங்கம்புதூர், பணிக்கன் குடியிருப்பு பகுதியை சேர்ந்த சுடர்மணி என்பவரது மகன் ரூபின் (21), அகஸ்தீஸ்வரம், தெற்கு புதூர் பகுதியை சேர்ந்த கண்ணன் என்பவரது மகன் அனிஷ் (21) ஆகியோரிடம் இருந்த சுமார் 50 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு கைது செய்யபட்டனர். அதன் தொடர்ச்சியாக நாகர்கோவில் சுற்று வட்டார பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக மதுவிலக்கு போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் 1 கிலோ 360 கிராம் எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் 2 இரண்டு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதில் சாமிதோப்பு பகுதியை சேர்ந்த கணபதி என்பவரது மகன் தனுஷ் கிருஷ்ணா (22), பீச் ரோடு பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்பவரது மகன் விஷால் (18) மற்றும் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ராஜேஷ் சவுகான் ஆகியோரிடம் இருந்து 1 கிலோ 360 கிராம் கஞ்சா மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.




இந்த கைது நடவடிக்கையானது மேலும் தீவிரபடுத்தப்படும் என்றும், கஞ்சா விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு வடக்கு கோணம் பகுதியை சேர்ந்த வர்கீஸ் மைக்கேல் என்பவரது மகன் லெனின் கிலிட்டஸ் (51) என்பவர் அதே பகுதியை சேர்ந்த ஐந்து வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் குற்ற எண் 296/2015., U/S : 6, 10 POCSO Act இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்ஸோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 5000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்கள்.

நீதிமன்ற வழக்கு விசாரணை சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர், இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாக கண்காணித்த நாகர்கோவில் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், ஆசாரிபள்ளம் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

இளைஞர்கள் போதை போன்ற தவறான பாதையை விட்டு சரியான பாதையை வழிகாட்டும் பொருட்டும் காவல்துறை பொதுமக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் *டாக்டர். ஸ்டாலின் IPS அவர்களின் முன்னெடுப்பான மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டியை நாகர்கோவில் அண்ணா விளையாட்டு மைதானத்தில் தொடங்கி வைத்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையினர் மாவட்ட கைப்பந்து கழகத்துடன் இணைந்து நடத்தும் முதலாம் ஆண்டு மாவட்ட அளவிலான காவல்துறை பொதுமக்கள் நல்லுறவு கைப்பந்து போட்டியில் 18 அணிகள் கலந்து கொண்டனர்.

வெற்றிபெற்ற அணியினர்...

முதல் பரிசு:- கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை

இரண்டாம் பரிசு:- TNU அணியினர்

மூன்றாம் பரிசு:- Noorul Islam College team

நான்காம் பரிசு :- Rohini College team

முறையோ ரூபாய் 15,000 , 10,000 , 7,500 , 2,500 மற்றும் வெற்றிக்கோப்பை வழங்கிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பாராட்டுகளை தெரிவித்தார்கள்.

... நிருபர் - டிகிரி இளையராஜா, வேலாயுதம்

# இளைஞர்கள் போதை பழக்கத்திற்கு ஆளாவதற்கு காரணம்... சமூக ஆர்வலர்கள் கருத்து!

தங்கள் பத்திரிகையில் வந்த ஒரு தலைப்பு இளைஞர்கள் போதை பழக்கத்திற்கு ஆளாவதற்கு காரணம் பெற்றோர்களா? ஆசிரியர்களா? காவல்துறையா? சமூகமா? என்ற கேள்வியை கேட்டு இருக்கிறீர்கள்..!

இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற தலைப்பு தான்..!

ஒரு குழந்தை பிறந்த பிறகு அவன் படிப்படியாக யாரை வணங்க வேண்டும் என்றால் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லி தான் வளர்ப்பார்கள்.

பொதுவாக குழந்தைகள் பள்ளி படிப்பை முடிக்கும் வரை தான் பெற்றோர்களின் கண்காணிப்பில் இருப்பார்கள்.

பிறகு கல்லூரிக்கு செல்லும் பொழுது அவர்களுடைய பழக்க வழக்கங்கள், புதிதாக தோன்றுகிற இளைஞர் ரத்தம், தான் சுதந்திரமாக இருப்பதாக ஒரு உணர்வு, பெற்றோரை தாண்டி மற்றவர் இடத்தில் பழகுவதற்கான நிறைய வாய்ப்புகளும் தனிமைகளும் கிடைக்கின்றன. ஒரு மாணவன் கல்லூரி வரை படிப்பை நல்ல முறையில் முடிப்பதற்கு ஆசிரியர்கள் உற்ற துணையாக இருப்பார்கள். அதற்கு முதலாவதாக பெற்றவர்களின் நல்ல குண நலங்களும் வளர்ப்பும் அவருடைய நல்லொழுக்கங்களும் பிள்ளையை தடம் மாறாமல் தடுக்கும். அதையும் மீறுகிறவர்கள் தவறான பாதைக்கு செல்கிறார்கள்.

அந்த காலங்கள் போல இந்த காலங்களில் மாணவர்களை ஆசிரியர்கள் பிரம்பால் கண்டிக்க முடியாது. அந்த அளவிற்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளை மீது செல்லம் அதிகம் வைத்து விடுகிறார்கள். இது ஒரு தவறான முன் உதாரணம்..!

தனது பிள்ளையை யாரும் எதுவும் சொல்லி விடக்கூடாது என்பதிலும் நாமும் ஏதேனும் சொல்லிவிட்டால் அவன் ஏதேனும் விபரீத முடிவு எடுத்து நமக்கு வாரிசு இல்லாமல் ஆகி விடுமோ? என்ற கவலையும் ஏற்படுவதால் பெற்றோர்கள் கண்டிப்பதை விட்டு விட்டு அவனிடத்தில் கொஞ்சுவதும் தாழ்ந்து பேசுவதும் பணிவதும் வேலியற்ற பயிராக வளர்க்க வைப்பதும் தவறான முன்னுதாரணங்கள்..!

அந்த இளைஞன் தன்னுடைய நட்பு பாதையை எந்த அளவுக்கு விரிவுபடுத்தி இருக்கிறான்? அவனுடைய தொடர்புகள் என்னென்ன? என்பதை பெற்றோர்கள் கவனிக்க முடியாத அளவிற்கு அவரவர் வேலைக்கு சென்று விடுவதால் எதிர்க்கும் நிலையும் எதிர்பார்க்கும் நிலையும் இல்லாமல் போய்விடுகிறது.

சமுதாயத்தில் வேலை வாய்ப்பு கிடைக்காத இளைஞர்கள் விரக்தியில் அதுபோல பாதிப்பு அடைந்தவர்களோடு சேர்ந்து தவறான பாதைக்கு செல்ல துணிந்து விடுகிறார்கள்.

ஒருவேளை அவர்களுக்கு படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைத்துவிட்டால் ஆரம்பத்தில் இருந்தே எல்லாவற்றிற்கும் பார்ட்டி என்ற ஒற்றை வார்த்தை தான், மது போன்ற போதை பழக்க வழக்கத்திற்கு ஆரம்பம்.. அதற்கு தான் முக்கியத்துவமும் தருகிறார்கள். மது அருந்திய பிறகு இதுதான் உண்மையான கலாச்சாரம் என்று நம்பி அறிவு மழுங்கிய பிறகு பேசுகிற வார்த்தை தவறானதாகவும் தடுமாறக் கூடியதாகவும் தடம் மாறக் கூடியதாகவும் அமைந்துவிடுகிறது.

திடீரென்று தனக்கு பொருளாதார ரீதியாக கஷ்டம் ஏற்படுகிற பொழுது எதிர்பார்த்த இடத்தில் அந்த பண உதவி கிடைக்காத போது தவறான நண்பர்கள் மூலமாக தவறான காரியத்திற்கு செல்கிறார்கள்.

உதாரணத்திற்கு..

இன்றைய இளைஞர்கள் நன்கு படித்தவர்களாக இருந்தும் உல்லாச வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக பெண்கள் கழுத்தில் இருக்கும் தங்க சங்கிலியை பறிக்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் சிறைச்சாலையில் அதிகம் இருப்பவர்கள் இளைஞர்களே..!

பல பேருடைய முன்னேற்றங்கள், புகழ், கௌரவம், மரியாதை தனக்கு எப்போது கிடைக்கும்? என்று படிக்காமல், உழைக்காமல் எதிர்பார்க்கிறார்கள்! அதை எளிதாக அடைந்து விடலாம் என்று போதையால் திருட்டு, கொள்ளை என்று தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை சீரழிக்கிறார்கள்.

ஆரம்பத்தில் இருந்தே பெற்றவர்களிடம் அன்பும் அரவணைப்பும் அதைவிட கண்டிப்பும் இருக்க வேண்டும் வரம்பு மீறும் மாணவனை தண்டிக்க ஆசிரியர்கள் பிரம்பு வைத்துக் கொள்ள முடிவதில்லை...!

கத்தியை தூக்கும் கயவனின் முன்பாக போலீசார் லத்தியை தூக்க முடிவதில்லை...!

கத்தியை தீட்டாதே புத்தியை தீட்டு என்றார்.. பேரறிஞர் அண்ணா..!

போதையில் கத்தியை தூக்குவது தான் இன்றைய காலகட்டத்தில் கெத்து என்றும், ஆதலால் நம்மை பார்த்து பொதுமக்கள் அச்சப்படுகிறார்கள்? இதுதான் வீரம்! என்றும் சமூகத்திற்கு எதிராக இருப்பவர்கள் நம்புகிறார்கள்.

இந்த சமுதாயமும் ஒரு மனிதனை ஜாதி மதம் பார்க்காமல், ஏழை பணக்காரன் என்று பார்க்காமல், மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும்.

நமது அரசாங்கம் மத வெறியை எதிர்ப்பது போலவே போதை பழக்கத்திற்கு யாரும் அடிமையாகி விடக்கூடாது என்பதிலும் மிகவும் கவனமாக இருந்து அபின் கஞ்சா, ஹெராயின் போன்ற போதை வஸ்துக்களை கட்டுப்படுத்தவே தன்னை முழு முயற்சியில் ஈடுபடுத்திக் கொள்கிறது.

மொத்தத்தில் இன்றைய இளைஞர்கள் 18 வயது முடிந்ததும் தங்களுக்கு ஓட்டுரிமை இருக்கிறது என்பதையும், 21 வயது முடிந்தால் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதையும் நன்றாக தெரிந்து வைத்திருக்கிற பொழுது வாழ்க்கையில் எவ்வாறு எப்படி எல்லாம் முன்னேற வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

என்னை யார் யார் எப்படியெல்லாம் சொல்லி என்னை திசை திருப்பினார்கள் என்று பெற்றவர்கள் மீதும் ஆசிரியர்கள் மீதும் காவல்துறை மீதும் இந்த சமுதாயத்தின் மீதும் பலி சுமத்தும் முன்பாக தன்னை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்..!

அவ்வாறு தன்னை உணர்ந்து கொண்டு விட்டால் போதை இல்லா தமிழகம் உருவாகும்..!

தமிழன் என்றொரு இனமுண்டு.. தனியே அவனுக்கு ஒரு குணம் உண்டு.. என்பதை நிரூபிப்பதற்கு வாய்ப்புகள் மீண்டும் உருவாகும்.

இளைஞர்களே..

போதைக்காக பாதை மாறாதீர்கள்..!

மகாத்மா சொன்னது போல இளைஞர்கள் தான் இந்த நாட்டின் தூண்கள்..!

இதுபோல நீங்கள் பலமாக இருங்கள்..

நாட்டிற்கும் வீட்டிற்கும் பாலமாக இருங்கள்..!

தன்னையும் தனது குடும்பத்தையும் சமுதாயத்தையும் சீரழிக்கும் போதை பொருட்களை எந்த விதத்திலும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை ஒவ்வொரு குடிமகன் உறுதிப்பூண்ட வேண்டும்..!

குடிக்காத மகான்கள் உருவாக வேண்டும் என்று நானும் விரும்புகிறேன்..!

**நங்கை RSK**
**சிறப்பு உதவி காவல் ஆய்வாளர்**
**சென்னை பெருநகர காவல்**
**8667550288**

சமூகத்தில் அதிகரித்து வரும் சிறார்களின் போதைப் பழக்கத்தை குறித்து **75வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி செல்வி பாண்டி அவர்களிடம்** கேட்ட பொழுது, ஊருக்கே ராஜாவானாலும் பள்ளிக்கு பிள்ளை, மற்றும் 'அடியாது பிள்ளை பணியாது' என்று பழமொழி உண்டு. இன்று சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை 'ராஜா' போன்று வளர்ப்பதினால் ஆசிரியர் கண்டித்தாலும் தண்டித்தாலும் அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்கின்றனர். இச்செயல் பிள்ளைகளுக்கு தவறான சிந்தனையை உருவாக்குகின்றன. மேலும் ஒவ்வொரு அரசு பள்ளியிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் PTA அமைப்பாகும். இது பள்ளி-வீடு இடையேயான தொடர்பை மேம்படுத்துகிறது. பள்ளி மாணவர்களின் கல்வி, உடல் மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்காக பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து செயல்படும் ஒரு முக்கிய அமைப்பாகும். இது பள்ளி மேம்பாடு மாணவர்களின் முன்னேற்றம் மற்றும் பள்ளி-வீடு இடையேயான தொடர்பை மாணவர்களின் திறனை வளர்த்தல், கற்றல் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்தல், மாணவர் முன்னேற்றம் பற்றி கலந்துரையாடல், கல்வி சார்ந்த இலக்குகளை நிர்ணயித்தல். மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் தனிப்பட்ட திறன்களைப் பாராட்டுதல், எதிர்காலக் கல்வி இலக்குகளைத் திட்டமிடல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செய்து வருகிறது. ஆனால் குறிப்பாக அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் இதில் கலந்து கொள்வதில்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும். இது போன்ற அமைப்புகளில் பெற்றோர்கள் மாதத்திற்கு ஒரு முறையாவது தங்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் ஒழுக்கம் சார்ந்த விஷயங்களை ஆசிரியர்களிடம் கலந்துரையாடி அதற்கேற்ப பிள்ளைகளை வழி நடத்தினால் அவர்களை இந்த சமூகத்தில் ஒரு தலை சிறந்த மனிதனாக உருவாக்கலாம் என்பது எனது கருத்து, என்று ரத்தின சுருக்கமாக கூறினார்.

சமூக ஆர்வலர்களின் கருத்து வரும் மாதமும் தொடரும்...







Editor & Publisher : **R.SRIDHAR**, 7/5, Muthu Devar Street, M K Puram, Subramaiapuram Post, Madurai, Tamil nadu - 625011. Printer by Meera Offset Printers, 104, Venkatrangam Pillai Street, Triplicane, Chennai, Tamil Nadu - 600005.